08 February 2020 - Issue 03

# நிராயுதம்

நிராதரவான மக்களிடையே நேசக்கரம்

# சுதந்திர தினம், தேசிய கீதம் யாருடைய தேசிய கீதம்?



ஸ்ரீ லங்கா தாயே - நம் ஸ்ரீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதார் ஒளி வளமே
நறிய மலர் என நிலவும் தாயே
யாமெல்லாம் ஒரு கருணை அனைபயந்த
எழில்கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ சிரோண்மணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே - நம் ஸ்ரீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

இலங்கையில் தமிழும் அரச கரும மொழியாக்கப்பட்டு மூன்று தசாப்தங்கள் கடந்து விட்டன. ஆனாலும் தமிழிலும் தேசிய கீதம் பாடப்பட வேண்டும் என்பதில் இழுபறி தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றது.

இலங்கையில் மூன்று தசாப்தகால யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது முதல் இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தின் அவசியம் பரவலாக உணரப்பட்டது.

(தொடர் பக்.03




EASCCA உத்தியோகபூர்வ ஆரம்பம் Page 04 >>




நல்லிணக்கத்தின் கொண்டாட்டம்! Page 10 >>

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பறவைகள் மீண்டும் பழைய கூடுகளைத் திரும்பிப் பார்க்கின்றன:

# சகவாழ்வின், நல்லிணக்கத்தின் அடிப்படையான சம அந்தஸ்து உறுதிப்படுத்தப்படுமா?

**அனைத்து சமூகங்களும் இரு பெரும் அரசியல் அணிகளை நோக்கி மீள எண்ணும் தருணம் தேசியக் கட்சிகளின் கொள்கை, நடைமுறைகள் தரமான மீளுருவாக்கத்தை வேண்டி நிற்கின்றன.**

இலங்கையின் தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல் என்பது பல் பரிமாணங்களைக் கொண்டது. சுதந்திரத் துக்கு முன்னர் இருந்தே தமிழர்களுக்கான தனியான கட்சி உருவாக்கத்துக்கான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. தமிழ் பேசும் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கில் தமிழ்த் தலைவரான ஜீ.ஜீ. பொன்னம்பலத்தால், 1944 இல் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் தொடங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து தமிழர்களின் அரசியல் பல பிளவுகளைக் கண்டது. தமிழ் அரசியல் தங்களுக்கான உரிமைகளைப் பெற்றுத் தராது எனும் நிலையில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டமும் திசை மாறி இறுதியில் பத்து வருடங் களுக்கு முன்னர் மௌனிக்கப்பட்டும் விட்டது. உரி மைகளைப் பெற்றுத் தருவதாகக்கூறும் இத்தமிழ்க் கட்சிகளின் பின்னாலேயே இன்னமும் தமிழர்கள் உள்ளனர்.

ஆனால் முஸ்லிம்களின் அரசியலென்பது அவ்வா றானதல்ல. வரலாற்று ரீதியாக, பெரும்பான்மைக் கட்சி களுடன் இணைந்ததாகவே ஆரம்பத்தில் இருந்தது. இலங்கை சுதந்திரம் பெற்ற காலம் முதல் 1980களின் ஆரம்பம் வரை முஸ்லிம்கள் தங்களை பலம் மிக்க அரசியல் சக்தியாக அடையாளப்படுத்தவில்லை.

முஸ்லிம் அரசியல் முன்னோடிகளில் ஒருவரான சேர் ராஸிக் பரீத், முஸ்லிம்கள் மிகச் சிறிய சிறு பான்மை இனமாக இருந்ததால் அவர்களால் இலங்கை யின் அரசியலில் பாரிய தாக்கத்தைச் செலுத்த இய லாது என எண்ணினார். இதற்கு 1915 இல் முஸ்லிம்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகளும் ஒரு காரணம். 1946 இல் அவர் ஐக்கிய தேசியக் கட்சியின் செனட்டராகவும், இணைப் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டார்.

மற்றொரு முன்னோடியான பதியுதீன் மஹ்மூத் (1904-1997), சிறிலங்கா சுதந்திரக் கட்சியை உருவாக் கியவர்களில் ஒருவர், முஸ்லிம்கள் மிகச் சிறுபான் மையினர்; பொதுத் தேர்தல்களின் முடிவில் அவர் களால் தீர்க்கமான பங்கை வகிக்க முடியாது என்ற சேர் ராஸிக் பரீத்தின் வாதத்தை நிராகரித்தார். அதற்குப் பதிலாக முஸ்லிம் மக்களை ஒரு பலமான சக்தியாக பதியுதீன் கருதினார்.

அதுவரை நீலத்திலும் பச்சையிலும் இணைந்து அரசியல் செய்த முஸ் லிம்களை இணைத்து அவர்களுக் கென்றே ஒரு தனித்துவமான அடையாளத்தைத் தந்தவர் எம். எச்.எம். அஷ்ரப். 1986 இல் சிறி லங்கா முஸ்லிம் காங்கிரஸை அவர் ஸ்தாபித்தார். இலங்கை யின் அரசியலில் முஸ்லிம் களைப் பேரம் பேசும் சக்தியாக மாற்றுவதில் அவரது பங்களிப்பு அளப்பரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2000ஆம் ஆண்டில் அவரது மரணத்துக்குப் பின்னர் முஸ்லிம் அரசியல் பல பிளவுகளைக் கண்டது; இன்னமும் கண்டு கொண்டிருக்கின்றது.

தமிழ், முஸ்லிம்களின் இந்தத் தனித்துவ அடையாள அரசியலாலோ அல்லது மாற்று அரசியலாலோ சாதித்தது எதுவுமில்லை என்பதை மக்கள் தற்போது உணரத் தலைப்பட்டிருக்கின்றார்கள்.

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் தமிழ், முஸ்லிம் சமூகங்களின் தனித்துவ அரசியலை நிலைகுலையச் செய்துள்ளது. சிறுபான்மை மக்களின் வாக்குகள் இன்றியே நாட்டின் ஜனாதிபதி கடந்த தேர்தலில் வெற்றி பெற்றிருக்கின்றார். இது தமிழ், முஸ்லிம் அடையாள அரசியலுக்கான பாரிய பின்னடைவாகவே பார்க்கப்பட வேண்டும்.

இதனால் தங்கள் அரசியல், சமூக அபிலாஷைகளை நிறைவேற்ற தமிழ், முஸ்லிம் மக்கள் மீண்டும் பெரும்பான்மைக் கட்சிகளையே நாடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

பெரும்பான்மைக் கட்சிகளில் அதிருப்தி கொண்டதாலேயே தமக்கென தனியான அடையாளத்தைத் தேடிய தமிழ், முஸ்லிம் மக்கள் மீண்டும் அவற்றை நாடும் நிலையில், பெரும்பான்மைக் கட்சிகள் அவர்கள் தொடர்பான தங்களது கடந்த காலக் கொள்கைகளை, நடைமுறைகளை மீளாய்வு செய்வது அவசியமானது.

தொடர்ந்தும் அவர்களது ஆதரவைத் தக்க வைக்க வேண்டுமெனில் அதற்கான முயற்சிகளில் பெரும்பான்மைக் கட்சிகள் இன்றே இறங்கவும் வேண்டும்.

அவ்வாறு பெரும்பான்மைக் கட்சிகளின் ஆதரவை நாடிச்செல்லும் தமிழ், முஸ்லிம் மக்களும் தங்களது கோரிக்கைகளுக்குச் செவிசாய்க்கும் அணிக்கே ஆதரவை வழங்கவும் வேண்டும்.

-வாசகி

## சுதந்திரதினம்... (தொடர்)

அதன் ஒரு முதற்படியாகவே கடந்த நல்லாட்சி அரசு 2016 ஆம் ஆண்டு முதல் சுதந்திர தினக் கொண்டாட்டங்களில் சிங்களத்திலும் தமிழிலும் தேசிய கீதத்தைப் பாட அனுமதியளித்தது. இலங்கையைத் தங்களது நாடாகவே ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லாத, சுதந்திர தினத்தையே கொண்டாட விரும்பாத ஒரு சமூகக் கூட்டத்தினர் தமது மொழியிலும் தேசிய கீதம் பாடப்பட வேண்டும் எனக் கோருவதன் முரண் விவாதத்துக்குரியதாக இருந்தாலும், தமிழ்ச் சிறுபான்மையினரையும் தங்களது சம பிரஜைகளாக ஏற்றுக் கொண்டதன் அடையாளமாக, யுத்தம் தந்த வலிகளுக்கான ஒரு மருந்தாக, சுதந்திர தினத்தில் தமிழிலும் தேசிய கீதம் பாடப்படுவது கருதப்பட்டது.



முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நல்லாட்சி அரசு தமிழ்ச் சிறுபான்மையினருக்கு வழங்கிய நல்லிணக்கத்திற்கான வாக்குறுதிக்கமைய அவர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட அடுத்த வருடம் முதல் சுதந்திர தினக் கொண்டாட்டங்களில் தமிழிலும் தேசிய கீதம் பாடப்பட்டது. 1949 க்குப் பிறகு முதன்முறையாகத் தமிழ் தேசிய கீதம் பாடப்பட்டது அப்போதுதான்.

அதனைத் தமிழர்கள் ஒரு நல்ல சமிக்ஞையாகத்தான் பார்த்தனர். ஆனால் அந்த மகிழ்ச்சி நீடிக்கவில்லை. காரணம் இம்முறை சுதந்திர தினக் கொண்டாட்டங்களில் தேசிய கீதம் சிங்களத்தில் மட்டுமே பாடப்படும் என்று வெளியான அறிவிப்புத்தான்.

ஆனால் இதில் இன்னொன்றையும் கவனிக்க வேண்டும். சுதந்திர தினத்தில் தேசிய கீதம் தமிழில் பாடப்பட அனுமதியளிக்கப்பட்ட போதும், அது தமிழ்ச் சிறுபான்மையினரது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வழி வகுத்ததா என்றால் அதற்கான பதில் இல்லையென்பதுதான்.

உலகில் அனேக நாடுகளில் அவ்வவ் நாடுகளின் பெரும்பான்மை மொழியிலேயே தேசிய கீதம் பாடப்படுகின்றது. விதிவிலக்காக தென்னாபிரிக்காவில் ஒரே தேசிய கீதத்தில் அங்கு அரச கரும மொழிகளாகவுள்ள 5 மொழிகளிலும் ஒவ்வோர் சரணம் பாடப்படுகின்றது. சுவிட்சர்லாந்தின் தேசிய கீதம் அங்குள்ள நான்கு மொழிகளிலும் பாடப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Cancer Ward Interior
(Transit home)


Office and Health Educational Center


Palliative Care Unit



# ஏப்ரல் 4 உலகப் புற்றுநோய் தினத்தில்

## EASCCA உத்தியோகபூர்வ ஆரம்பம்

EASCCA என்ற குறும்பெயரால் அழைக்கப்படும் Eastern Cancer Care Hospice ஆனது ஏறாவூரில் அமைக்கப்பட்டு கடந்த இரு வருடகால முயற்சியின் பிற்பாடு பூர்த்தியாக்கப்பட்டு 2019.01.13 தொடக்கம் புற்றுநோயாளர்களுக்குத் தனது சேவையை வழங்கி வருகிறது. இந்நிலையம் இலங்கையின் சுதந்திர தினமான ஏப்ரல் 4ம் திகதி உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையத்திற்கு இலங்கையின் எந்தப் பாகத்தில் இருந்தும் நோயாளிகள் அனுமதிக்கப்பட முடியும். இங்கு பிந்திய நிலையில் உள்ள புற்று நோயாளர்களுக்கு சகல பராமரிப்பு மருத்துவ சேவைகளும் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதே போன்று தூர இடங்களில் இருந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையிலோ அல்லது அண்மையிலுள்ள எந்தவொரு புற்றுநோய் வைத்தியசாலையிலுமோ சிகிச்சை பெறுவோர்களுக்குத் தங்குமிட வசதிகள் தேவைப்படுமிடத்து அதற்கான சேவைகளும் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

புற்றுநோய் ஏற்பட முன் அதற்கான அறிகுறிகளை இனங்காணும் Screening எனப்படும் சேவையையும் விரைவில் ஆரம்பிக்கவுள்ளதாக இந்நிலையத்தின் தலைவரும் புற்று நோயியல் வைத்திய நிபுணருமான Dr. A. இக்பால் குறிப்பிட்டார். புற்றுநோயாளர்களைச் சார்ந்திருப்பவர்களுக்கான நலன்புரிச் சேவைகளையும் குறிப்பாக அவர்களது பிள்ளைகளின் கல்வி மற்றும் ஏனைய தேவைகள் தொடர்பிலும் EASCCA கவனம் செலுத்தவிருப்பதாக அவர் மேலும் கருத்துத் தெரிவித்தார். இந்நிலையம் தொடர்பாக அரசாங்க உத்தியோகத்தர்கள், மாணவர்கள், பொதுமக்கள் மத்தியில் விழிப்பூட்டும் பல்வேறு நிகழ்வுகள் காத்தான்குடி, ஏறாவூர், வாழைச்சேனை, ஓட்டமாவடி உட்பட பல்வேறு பிரதேசங்களில் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றன.

இதுவரைக்கும் 75 நோயாளர்கள் அவர்களது குடும்ப உறவினர்கள் உட்பட இங்கு பலன் பெற்றிருக்கிறார்கள். சிலர் இறந்தும் இருக்கிறார்கள். இங்கு மரணிப்பவர்களின் உடல்களை அவர்களது வீடு வரை எடுத்துச் செல்வதற்கான சேவையையும் இந்நிலையம் இலவசமாக வழங்கவுள்ளது. பெரும்பாலானோர் இன்றும் உயிருடன் வாழ்ந்து கொண்டு இதன் சேவைகளைப் பெற்றுக் கொண்டிருக்கின்றனர். இந்தச் சேவைகளுக்கு மேலதிகமாக இந்நிலையத்தில் இருந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்குக் கிளினிக்குக்கோ அல்லது வேறு எந்தத் தேவைக்குமோ செல்வதற்கு அவர்களுக்கான வாகன வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்தச் சேவைகள் யாவும் முற்றிலும் இலவசமென்பது புற்று நோயாளர்களுக்கும் அவர்களது குடும்பத்தாருக்கும் மகிழ்ச்சிகரமான செய்தியாகும்.

இந்நிலையமானது தனவந்தர்களின் உதவிகள் மூலமாகவே உருவாக்கப்பட்டது. இதன் நடைமுறைச் செலவுகள் தற்போது பொதுமக்களின் அனுசரணையுடன் இடம்பெறுகின்றன. எனவே, இதற்கு உதவி வழங்கக்கூடிய தனவந்தர்களும் பொதுமக்களும் EASCCAவுடன் தொடர்பு கொண்டு உங்களுடைய ஆதரவை வழங்க முடியும். இந்த ஆதரவானது நாட்டில் நொந்து போயுள்ள புற்று நோயாளர்களுக்குப் பெரியதொரு ஈடேற்றமாக அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மும்மொழிப் பாடசாலை! பல்லின மாணவர்கள்?

நிலையான வளர்ச்சிக்குத் தேவையான இரண்டு முக்கிய கூறுகள் மொழியுடன் தொடர்புடையவை. நாடு அபிவிருத்தி அடைவதற்கும் வளர்ச்சியைத் தக்கவைத்துக் கொள்வதற்கும் அந்த நாடு சொந்த மக்களின் விருப்பங்களையும் அபிலாஷைகளையும் பிரதிபலிக்கும் வகையில் ஒரு உயிரோட்டமான ஜனநாயகத்தை நோக்கிச் செல்ல வேண்டும். துடிப்பான ஜனநாயகம் திறம்பட செயல்பட மக்கள் மத்தியில் விவாதங்கள், கருத்துப் பரிமாற்றங்கள் மற்றும் அறிவுசார் வாதங்கள் என்பன தேவைப் படுகின்றன.

இலங்கையில் 90 சதவீத சிங்கள மக்களுக்குத் தமிழில் தொடர்பு கொள்ள முடியாது, 70 சதவீதத் தமிழ் மக்களுக்கு சிங்கள மொழியில் தொடர்பு கொள்ள முடியாது. இலங்கையில் 200 ஆண்டுகள் ஆங்கிலம் ஆட்சி மொழியாக இருந்தும் சமூகங்களுக் கிடையேயான இணை மொழியாக ஆங்கிலத்தைப் பொறுத்தவரை, பாடசாலைகளில் 11 ஆண்டுகள் வரை ஆங்கில மொழியில் மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டும் 15 சதவீத மக்களாலேயே இன்று ஆங்கிலத்தில் சரளமாகத் தொடர்பு கொள்ள முடிகிறது. பள்ளி அமைப்பில் திறமையான ஆங்கில ஆசிரியர்களின் கடுமையான பற்றாக்குறை, காலா வதியான மற்றும் பழைமைவாத கற்பித்தல் முறை கள் என்பனவற்றால் இது சாத்தியமற்றுப் போனது.

அதனாலேயே பெற்றோர் தங்கள் பிள்ளைகளைச் சிறந்த பாடசாலைகளில் சேர்ப்பதற்கு முண்டியடிக் கின்றனர். நகர்ப்புறத்தில் உள்ள பிரபல பாடசாலை நோக்கிப் பெற்றோர் செல்வதைத் தடுக்கும் வகையில் பாடசாலைக் கல்வியின் நவோதயம் திட்டத்தின் கீழ் தற்போது மும்மொழிப் பாடசாலைகளை உருவாக்கும் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதன் மூலம் பிரபல பாடசாலைகள், பிரபலமற்ற பாடசாலைகள் என்ற வேறுபாடின்றி எல்லாப் பாட சாலைகளிலும் மக்கள் போட்டியின்றி இணைந்து கொள்வர். எல்லாப் பாடசாலைகளுக்குமான வளப் பகிர்வும் சம அளவானதாகவே இருக்கும். பெற்றோர் தங்கள் பிள்ளைகளைப் பெற்ற நாளிலிருந்தே சிறந்த பாடசாலைகளைத் தேடிச்செல்வதற்கான தேவை ஏற்படாது என இதன் நன்மைகளை அடுக்கிக் கொண்டே போனாலும், இனங்களுக்கிடையிலான சகிப்புத்தன்மை அருகி வரும் இக்காலங்களில் மும்மொழிப் பாடசாலைகளைப் போன்றே பல்லினப் பாடசாலைகளும் அத்தியாவசிமானவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றுக் குருடர்களே தமிழ், முஸ்லிம் உறவைக் கூறு போட விளைகின்றனர்

## ஆரையம்பதி, காத்தான்குடி பிரதேச செயலகங்களின் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்ட சிறகுநுனி குறுந்திரைப்பட விழாவில் கருத்துப் பகிர்வு

### குறுந்திரைப்படம் - அபாயா

***நிரோஷா கியாஸ்:*** அபாயாவால் முஸ்லிம் பெண்களை அடக்குகின்றனர் என்ற கருத்துக்கு மீதமாக ஒரு தமிழ் சகோதரி அதில் விருப்பம் கொள்வது போன்று காண்பிக்கும் இக்குறும்படத்தை வரவேற்கின்றோம். அபாயாக்குள் நாங்கள் சுதந்திரமாக, சந்தோஷமாக இருக்கின்றோம் என்கின்ற விசயத்தையும் காட்டி இருக்கலாம்.

***ரியாஸ்:*** அபாயா ஒரு வகை ஆடை எனும் கருப்பொருளை சமூகத்தின் மத்தியில் விதைத்திருக்கின்றீர்கள். நாங்கள் எவ்வாறு இனம் பாராமல் Shirt அணிகின்றோமோ Saree அணிகின்றோமோ அதே போன்று அபாயாவும் ஒரு ஆடையாக நோக்கப்பட வேண்டியது.

***ஜெஸ்மில்:*** நான் மூன்று விஷயங்களில் பாராட்டு தெரிவிக்கின்றேன். ஒன்று, பொழுது போக்கு சினிமா என்ற விடயத்துக்கு அப்பால் நீங்கள் இக் குறுந்திரைப் படங்கள் மூலம் புதிய இரசனையை உருவாக்குகின்றீர்கள்.

இரண்டாவதாக காத்தான்குடி போன்ற இறுக்கமான ஒரு இஸ்லாமிய சமூகத்தில் தைரியமாக நின்று திரைப்பட ஊடகத்தினூடாக இந்தச் செய்தியைச் சொல்ல வருகின்றீர்கள், இதற்குள்ளாலான பண்பாட்டு கலாச்சார நெருக்கடிகளையும் எதிர்நோக்கியவர்களாக.

மூன்றாவதாக, இதிலே முஸ்லிம் பெண்கள் நடித்திருப்பது. தடைகளைத் தாண்டி ஒரு தெளிவோடு முன்னின்று முஸ்லிம் பெண்களையும் ஈடுபடுத்தி இதனைச் செய்திருக்கின்றீர்கள்.



***நபர் 1:*** இது Staffக்குப் போய் சேருர மாதிரி publicக்கும் போய்ச் சேர வேணும். வேற நிறுவனங்கள், வானொலிகள், தொலைக்காட்சிகளோடு தொடர்பு கொண்டு தென்னிந்தியப் படங்கள், நாடகங்களை அவங்க publicity செய்ற மாதிரி நாங்களும் இந்தப் படங்கள Media மூலம் மக்களுக்கு கொண்டு சேர்க்கிறது நல்லம்.

***நபர் 2:*** போடப்பட்ட மூன்று படங்கள் பெண்கள் பிரச்சினைகள் சம்பந்தமாகத்தான் இருந்தன. ஆனால் இந்தச் சமூகத்தில் ஆண்களுக்குப் பிரச்சினை இல்லையா என்பது என்னுடைய கேள்வி.

***ரசூல்ஷா:*** மிக அற்புதமாக இனமுறுகல்களையும் மனதில் இனங்களுக்கிருக்கின்ற குரோதங்களையும் எவ்வாறு சினிமாவினூடாக நல்லிணக்கத்திற்கான ஒரு வழியாகப் பயன்படுத்தலாம் என்பதைக் கருப்பொருளாகக் கொண்டு உருவாக்கப்பட்டிருக்கின்ற இந்தக் காத்திரமான படைப்புக்கள் மிகவும் பாராட்டப்பட வேண்டியவை.

***சமுர்த்தி உத்தியோகத்தர்:*** இன முரண்பாடு தொடர்பாக சமூகத்தில் பரவலாகப் பேசப்பட்ட விடயத்தை நீங்கள் குறுந்திரைப்படமாகக் கொண்டு வந்ததற்கு நன்றி. இரு இன உறவை இன்னும் இறுக்கமாக எடுத்துக் காட்டி இருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்று நினைக்கின்றேன்.

***திரைப்பட விழா இயக்குனர் ஜாபிர்:*** இந்தப் பிரச்சினைகளெல்லாம் ஆண்களுடையவை என்டு தான் நினைக்கிறன். பிரச்சினைக்குட்படுறது தான் பெண்கள். fake ID இல் இருக்கிறது ஆண்கள். அபாயாவ social mediaவில் criticize பண்ணுறது பெரும்பாலும் வேற சமூகங்களைச் சேர்ந்த ஆண்கள். Crossing the muslim street படம் போல, வீட்டில இருக்கிற ஆண்கள் தான் பெண்கள அங்க போகாத இங்க போகாத என்டு சொல்லி பிரச்சினைப் படுத்திறது. ஆண் மையசிந்தனை வயப்பட்ட ஒரு தொகைப் பெண்களும் இருக்கிறாங்க.

Fake ID படத்தில மிக நுணுக்கமாக அந்த charactors கொண்டு வர வேண்டி இருந்தது. அதுல யார்ட முகமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்பட ஏலாத அளவுக்கு fake ID-களால் பெரிய பிரச்சினை. ஜெஸ்மில் சொன்னது போல முஸ்லிம் பெண்கள் இந்தப் படங்களுக்குள்ள இலகுவா வரல்ல, கவனமாக Technical ஆக அவங்களக் கொண்டு வந்தம். ஆகவே பெண்கள் நேரா வாறது இன்னம் நடக்கல்ல ஆனா நடக்கனும் அது.



**நபர் 3:** இந்தக் குறுந்திரைப்படங்கள் சிங்கள மொழியிலும் மொழி மாற்றம் செய்யப்பட்டு திரையிடப்பட வேண்டும் என்பது என்னுடைய கருத்து.

**நபர் 4:** இறுதியாக திரையிடப்பட்ட மூன்று திரைப்படங்களும் கடந்த காலம் நிகழ்காலம் அதே போன்று எதிர்காலம் என மூன்று காலங்களையும் சொல்வது போன்று இருந்தது. யாழ் திரும்பும் முபாறக் என்பது 90 ஆம் ஆண்டு வரலாற்றையும் அதே போன்று கூத்து என்பது இடைப்பட்ட காலங்களிலே சமூகம் எவ்வாறு இருந்தது என்பதையும் அதே போன்று ஹர்த்தால் என்பது சமூகம் எவ்வாறு இப்போது இருக்கின்றது என்பதைப் போன்ற விம்பத்தையும் எனக்கு ஏற்படுத்தி இருக்கின்றது.

### குறுந்திரைப்படம் - ஃபேக்ஐடி பார்த்துக் கொண்டிருக்கிறான்

**மொஹமட் நூர்தீன்:** சமுக ஊடகங்கள் பல்வேறு தாக்கங்களைச் செலுத்துகின்ற இன்றைய காலகட்டத்தில் இத் திரைப்படம் மிகவும் அற்புதமாக இருந்தது. சமூக ஊடகங்கள் எவ்வாறு இளைஞர்கள் மீது தாக்கம் செலுத்து கின்றன என்பதற்கு ஒரு சிறந்த உதாரணமாக இத்திரைப் படம் இருக்கிறது.

**திரைப்பட விழா இயக்குனர் ஜாபிர்:** சரஸ்வதி பூஜை என்பது நமது சூழலில் உள்ள சாதாரணமான விடயம். அங்கு முஸ்லிம்கள் பிரசன்னமாவதை இனக் குரோதத் துடன் Fake ID சித்தரித்த காலத்தில்தான் இந்தப் படத்தை உருவாக்கினோம். இது உண்மையாக நடந்த சம்பவம். அந்த Fake IDயால் பலருடைய வாழ்க்கை சிதைந்தது. அதை மையமாக வைத்து தான் இந்தப் படம் எடுக்கப்பட்டது.

**ரியாஸ்:** Fake ID என்பதும் இந்தச் சமூகத்தில் உள்ள அதிகமானவர்களை மன உளைச்சலுக்கு உள்ளாக்குகின்ற ஒரு கருப்பொருள். அதிலிருந்து சமூகத்திலுள்ளவர்களை விடுவிக்கும் சிந்தனைப் போக்கை வரவேற்கின்றேன்.



### குறுந்திரைப்படம் - ஹர்த்தால்

**ஜெஸ்மில்:** மட்டக்களப்பின் வாழ்வாதாரம் ஜீவனோ பாயம் என்பது தமிழ் முஸ்லிம் உறவில் தான் தங்கி இருக்கிறது. நாங்கள் காலையில் சாப்பிடுகின்ற ஆகாரத் திலிருந்து எல்லாப் பகுதிகளும் தமிழ் பிரதேசத்தில் தான் எடுக்கின்றோம். அதே போன்றுதான் ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் இந்தப் பிரதேசத்திற்கு தொழிலுக்காக வரு கின்றார்கள் அவர்கள் காத்தான்குடி அல்லது அதனை அண்டிய சூழல்களிலே வாழ்பவர்கள். ஒரு நாள் ஹர்த்தா லால் இந்த சமூகங்களிலே ஏற்படுகின்ற மிகப் பெரிய பாதிப்பு, அந்தப் பிரச்சினையைத் தமிழ் முஸ்லிம் மக்கள் உணரும் நோக்கிலமைந்த இக்குறுந்திரைப்படம் அற்புத மான ஒன்று.

### குறுந்திரைப்படம் - கூத்து

**ஜெஸ்மில்:** நீங்கள் எடுத்துள்ள கதாபாத்திரம் இப்போதைய முஸ்லிம் சமூக அமைப்பைப் பொறுத்தளவில் இலகுவாக ஜீரணித்து கொள்ள முடியாத ஒன்று. அந்தளவு நாங்கள் அந்நியோன்னியமாகப் போகவில்லை. யுத்தத் திற்குப் பின்னால் அப்பிடியான பாரமான கதாபாத்திரத்தை திடீரென முஸ்லிம் சமூகத்துக்குள் கொண்டு வருவதை விட்டு சில இலகுவான உடன்பாடான கதாபாத்திரங் களைக் கொண்டு வருவீர்களாயின் அது பொருத்தமாக இருக்கும் என்று நான் நினைக்கின்றேன்.

**திரைப்பட விழா இயக்குனர் ஜாபிர்:** அதில் இருக்கின்ற விடயம் என்னவென்றால் அது நமக்கு கஸ்டமா தெரியிற அளவுக்கு நிலமை மோசமா இருக்கு. கலைகளில் தமிழ், முஸ்லிம் மக்கள் இணைந்திருந்தது தான் வரலாறு. அண் மையில நாங்க இந்தப் படத்தை அக்கரைப்பற்றில் போட்டு காட்டின நேரம் ஒருவர் சொன்னார் நம்மட பகுதியில கூத் தாடின முஸ்லிம் ஆட்கள் இருக்கிறாங்க என்று. அப்பிடி லாம் இருந்திருக்கு. தமிழ் இலக்கியங்களை எடுத்தால் அந்தப் பட்டியலில் கணிசமான அளவு முஸ்லிமாக்கள் இருப்பாங்க. அதே போல தான் எமது வானொலி நாட கங்கள், திரைப்படங்களை எடுத்துப் பாத்தா அப்படி தான் இருக்கு.

-சௌமியா சேகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2:04
Add Recycling Bins in Pease P...

[redacted]
Yesterday at 11:08 AM

**இஸ்லாமிய பள்ளிவாசல் வளாகத்தில் இந்து முறைப்படி இந்துக்களுக்கு திருமணம்**

மத நல்லிணக்கத்தால் நெகிழவைத்த கேரளம்!

கேரள மாநிலம் ஆலப்புழா மாவட்டத்தில் உள்ள சேர வல்லி பகுதியில் செயல்பட்டு வருகிறது சேரவல்லி முஸ்லிம் ஜமாத் கமிட்டி. சேரவல்லி ஜமாத்துக்கு கடந்த நவம்பரில் ஒரு இந்துப் பெண்ணிடம் இருந்து கடிதம் வந்துள்ளது. அதில், கணவரை இழந்த பிந்து என்ற பெண் ஒருவர், தன் மகளுக்கு திருமணம் செய்துவைக்க உதவி தேவைப் படுவதாகவும், அதற்கு ஜமாத் கமிட்டி உதவ வேண்டும் என்றும் வேண்டுகோள் வைத்திருந்தார்.... See More



**Amutha Chandran**
உங்களின் இந்த பதிவை படிக்கும் போதே அந்த காட்சி மனக்கண்ணில் தோன்றியது அத்துடன் மனதில் ஒருவித நெகிழ்ச்சி யுடன் கண்களில் (கண்) நீர் பெருகியது..... வாழ்க மணமக்கள்.... வெல்க மனித ஒற்றுமை.....
2 d Like Reply 3

இதனையடுத்து, பிந்துவின் மகள் அஞ்சுவுக்கு இஸ்லாமிய மசூதி வளாகத்திலேயே திருமணம் செய்து வைப்பது என முடிவு செய்யப்பட்டு, திருமணத்தை ஜனவரி 19ம் தேதி நடத்த திட்டமிட்டது ஜமாத். திட்டமிட்டபடி அஞ்சுவுக்கும், சரத் சசி என்பவருக்கும் ஜமாத் கமிட்டியின் முன்னிலையில் திருமணம் நடைபெற்றது.

பள்ளிவாசல் வளாகத்தில் நடைபெற்றாலும், இந்து முறைப்படியே இந்தத் திருமணம் நடைபெற்றுள்ளது. இதற்காக, பிந்துவின் மகள் அஞ்சுவுக்கு பத்து சவரன் தங்க நகை மற்றும் 2 லட்சம் ரூபாய் பணம் பரிசாகக் கொடுத்து, ஆயிரக்கணக்கான மக்களுக்கு அறுசுவை விருந்து படைத்து திருமணத்தை முன்னின்று நடத்தி வைத்துள்ளனர் இஸ்லாமியர்கள்.

தங்களிடம் உதவி கோரிய பிந்துவுக்கு அளித்த வாக்குறுதியின்படி, அவரது மகளின் திருமணத்தை விமரிசையாக நடத்தி முடித்திருக்கும் இஸ்லாமியர்களை நாடு முழுவதுமுள்ள மக்கள் பாராட்டி வருகிறார்கள்.

இந்நிலையில், கேரள முதல்வர் பினராயி விஜயன், மணமக்களுக்கும், திருமணத்தை நடத்தி வைத்து ஒற்றுமைக்கும், மத நல்லிணக்கத்துக்கும் எடுத்துக்காட்டாக விளங்கிய இஸ்லாமியப் பெருமக்களுக்கும் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது குறித்து தனது ட்விட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ள கேரள முதல்வர் பினராயி விஜயன், ''கேரள மக்களின் ஒற்றுமைக்கு இது ஒரு எடுத்துக்காட்டு. சேரவல்லி முஸ்லிம் ஜமாத் மசூதி அஞ்சு மற்றும் சரத் ஆகியோரின் திருமணத்தை இந்து மத முறைப்படி நடத்தி வைத்துள்ளது.

புதுமணத் தம்பதிகளுக்கும், அவர்களது குடும்பத் தாருக்கும், மசூதி நிர்வாகத்தினருக்கும், சேரவல்லி மக்களுக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

**Pinarayi Vijayan**
@vijayanpinarayi

An example of unity from Kerala.

The Cheravally Muslim Jamat Mosque hosted a Hindu wedding of Asha & Sharath. The Mosque came to their help after Asha's mother sought help from them.

Congratulations to the newlyweds, families, Mosque authorities & the people of Cheravally.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Rajan**
ஒரு மத விவகாரங்களில் மற்ற மத த்தவர் மூக்கைநுழைக்காதவரை மத நல்லணக்கத்திற்கு எந்த கேடும் இல்ல! ஆனால இதை விரும்பாதவர்கள் அரசியல் நா[redacted]

**Chithra Balasubramanian**
நவகாளியில் காந்தி பட்ட துன்பத்தையும் துயரையும் நினைத்துப் பார்க்கிறேன். மனுஷன் இதைப் பார்த்திருந்தால் எவ்வளவு சந்தோஷப்பட்டிருப்பார்.?'





**Kanagasabai Natarajan**
தென்னகத்தின் சிறப்பு இதுதான். மேலும் வளர்ந்து சரித்திரம் படைக்கட்டும்.

**Gobinath Pannirselvam**
வார்த்தைகளில்லை நெகிழ்ச்சியான சம்பவம். மணமக்கள் கொடுத்து வைத்தவர்கள் வாழ்த்துகள்

**Gobinath Pannirselvam**
மனிதத்தை மிஞ்சிய மதம் எங்கேயும் இல்லை.

**என்றும் கவியுடன் முஹம்மது முஸம்மில்**
அல்ஹம்துலில்லாஹ்... எல்லாப் புகழும் இறைவனுக்கே.

**Humayun Kabeer Batcha**
.
இது தப்பான செயல்.
.




**Samsudin Alfasy**
Excellent OUTSTANDING EXAMPLE OF HUMANITY UNITY IN DIVERSITY LIVE PEACE TRANQUILITY SOCIETY

**Mohamed Ahsan**
Idayam silirththuppohum padivuu.. Manidhame.... Endrum uyarndadhu...

**Sivasakthy Gopalapillai**
மனித நேயம் மிக்க நிகழ்வு ...இறையருளினால் இவ்வண்ணநிகழ்வுகள் தொடரவேண்டும் வேற்றுமைகள் ஒழியவேண்டும்


**Rani Rams**
அனைத்து நல் இஸ்லாமிய உள்ளங்களுக்கும்,மண மக்களுக்கும் நற் பதிவிட்ட உங்களுக்கும் நல் வாழ்த்துக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நொச்சிமுனை தர்ஹா:
# நல்லிணக்கத்தின் கொண்டாட்டம்!

மட்டக்களப்பு நொச்சிமுனை புளியம் போக்கர் அப்பா வலியுல்லாஹ் தர்ஹா ஷரீபின் வருடாந்த கந்தூரி வைபவம் கடந்த 2020 ஜனவரி 27 திங்கட்கிழமை மாலை 5.00 மணியளவில் திருக்கொடி யேற்றத்துடன் வெகுசிறப்பாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. 1990 ஆம் ஆண்டு போர்க் காலத்தில் அச்சம் காரணமாக இங்கு பூர்வீகமாக வாழ்ந்த முஸ்லிம்கள் காத்தான்குடிக்கு இடம் பெயர்ந்த பின்பும் நீண்ட வரலாற்றுப் பாரம்பரியம் மிக்க இத்தர்ஹாவை நொச்சிமுனை தமிழ் மக்களும் முஸ்லிம்களும் இணைந்து தொடர்ந்தும் பராமரித்து வருகின்றனர். ஆண்டு தோறும் தொடராகப் பன்னிரண்டு நாட்கள் நடைபெறும் இந்நிகழ்விற்குத் தூரப் பிரதேசங்களிலிருந்தும் பொதுமக்கள் வருகை தருகின்றனர். தினமும் நெய்ச் சோறு சமைத்து இரவில் அனைவருக்கும் பகிர்ந்தளிக்கப்படுகிறது. சமையலுட்பட அனைத்திலும் தமிழ், முஸ்லிம் மக்கள் மன மகிழ்வுடன் கலந்து செயலாற்றுவதே தர்ஹாவின் ‘அதிசயமெ’ன்கின்றனர் சகவாழ்வை நேசிப்போர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'நொச்சிமுனை புளியம்போக்கர் அப்பா வலியுல்லாஹ் தர்ஹா' ஆண்டுக் கந்தூரி

கல்லடிப் பாலத்திலிருந்து தெற்குப் பக்கமாக சுமார் 3 கிலோ மீற்றர் தூரத்தில் மட்டக்களப்பு வாவிக் கரையோரமாக அமைந்துள்ள கிராமம் நொச்சிமுனை. தமிழர் குடியிருப்புக்களின் மத்தியில் காலங்காலமாக வாழ்ந்து வந்த இந்நிலத்திலிருந்து 90களில் முஸ்லிம்கள் முற்றாக வெளியேற நேர்ந்தது.

நொச்சிமுனைக் கிராம முஸ்லிம்கள் வாவியோடிணைந்த மீன்பிடித்தொழிலையே தம் பிரதான வாழ்வாதாரமாகக் கொண்டிருந்தனர். காத்தான்குடியில் குடியேறிய பின்பும் கடற்தொழில், மீன் வியாபாரம் என அதே பாணியிலான தொழில்களிலேயே அவர்கள் பெரிதும் ஈடுபட்டனர். போர்க் காலத்தில் அவ்வப்போது ஏற்பட்ட சுமுக நிலைமைகள், மீண்டும் இவர்கள் நொச்சிமுனைக்குச் சென்று தம் பாரம்பரியத் தொழிலை ஆரம்பிப்பதை சாத்தியமாக்கின. அதனால் பரம்பரை பரம்பரையாகத் தம்வசமிருந்த மீன்பிடித் துறையைத் தொடர்ந்தும் பயன்படுத்தக்கூடிய நிலைமை ஏற்பட்டது. இதற்கு அடிப்படையாக அமைந்தது நொச்சிமுனை ஆற்றங்கரையில் அமைந்திருக்கும் 'புளியம்போக்கர் அப்பா வலியுல்லாஹ் தர்ஹா' எனப்படும் முஸ்லிம் பெரியார் ஒருவரின் அடக்கஸ்தலமாகும். அதனைத் தரிசிக்கச் செல்லும் வேளைகளில் இரு சமூகங்களுக்குமிடையில் நேர்ந்த சந்திப்புக்கள் கடந்த கால மனக் கசப்புக்களை அகற்றி உறவைத் துளிர்விடச் செய்தன.

நொச்சிமுனையிலிருந்து முஸ்லிம்கள் வெளியேறிய பின் அவர்கள் அங்கு வாழ்ந்ததற்கு ஆதாரமாக எஞ்சியிருப்பது இத்தர்ஹா மாத்திரமே. இதற்குக் காரணம் நொச்சிமுனைத் தமிழ் மக்கள் மத்தியில் அது பெற்றிருக்கும் சிறப்பேயாகும். தமிழர்களும் இடம் பெயர்ந்த நொச்சிமுனை முஸ்லிம்களும் இன்றுவரை அதனைப் போற்றிப் பாதுகாத்து வருகின்றனர். நீண்ட கால வரலாற்றைக்கொண்ட இத்தலம் பற்றிய பல்வேறு கதைகள் இங்கு உலாவுகின்றன.



நொச்சிமுனைக் கிராமத்தின் சகவாழ்வு நினைவு கூரல் நிகழ்வாக 'புளியம்போக்கர் அப்பா வலியுல்லாஹ் தர்ஹா' ஆண்டுக் கந்தூரி இன்று திகழ்கின்றது. யுத்தகால அனர்த்தங்களில் பாதிக்கப்பட்ட தரப்பினர் தனித்தனியாக நினைவுகூரல்களை நடத்துவதும் அவற்றில் குறித்த பிரிவினர் மாத்திரம் கலந்து கொள்வதுமே வழக்கமாகும். அவ்வாறான நிகழ்வுகள் பொதுவாக இரு பிரிவினரிடையேயும் மேலும் இடைவெளிகளை அதிகரிக்கவே வழிவகுக்கின்றன.

நொச்சிமுனையில் எதிரெதிர் தரப்புக்களாக மாற நேர்ந்த இரு சமூகத்தினரும் ஒன்று கூடவும் துயரங்களை மறுதலித்து குசலம் விசாரிக்கவும் உணர்வுகளைப் பகிரவும் இடமளிக்கும் இக்கந்தூரி, நினைவுகூரலில் ஒரு மாறுபட்ட பரிமாணம் எனலாம்.

-அலைஞன்

## படங்களின் பத்திரிகை மாணவர்கள் மத்தியில்

இளைய தலைமுறையினர் மத்தியில் புதிய அச்சு ஊடகக் கலாசாரத்தை அறிமுகப்படுத்தவும் இது பற்றிய அவர்களது கருத்துக்களை அறியவுமென நிராயுதம் இதழ் 2 பாடசாலைகளில் விநியோகிக்கப்பட்டது. மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 10 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு ஒவ்வொரு பாடசாலையையும் சோந்த 50 மாணவர்களுக்கு மொத்தமாக 500 இதழ்கள் இலவசமாக விநியோகிக்கப்பட்டன. இதன் போது இம்முயற்சி பற்றிய மாணவர் கருத்து அறியப்பட்டது.

புதியமுறை அச்சு ஊடக இதழியல் குறித்து மாணவர்கள் மகிழ்ச்சியையும் ஆதரவையும் வெளிப்படுத்தினர். இவ்விதம் தொடாந்து மேலும் 6 இதழ்கள் குறித்த மாணவர்களுக்குத் தொடர்ச்சியாக வழங்கப்படவுள்ளது. ஒவ்வொரு முறையும் புதிய இதழைப் பெறும்போது மாணவர்கள் முந்திய இதழ் பற்றிய தம் அபிப்பிராயத்தை எழுத்து வடிவில் வெளிப்படுத்துவதற்கான படிவங்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டன. இந்நிகழ்வுகளில் பாடசாலை அதிபர்கள், ஆர்வமிக்க ஆசிரியர்கள் கலந்து சிறப்பித்தனர். இத்திட்டத்தில் இணைந்து கொண்டுள்ள பாடசாலைகள்:



களுதாவளை மகா வித்தியாலயம்
ஆரையம்பதி மகா வித்தியாலயம்
ஆரையம்பதி ராமகிருஷ்ணமிஷன் வித்தியாலயம்
காத்தான்குடி மீரா பாலிகா தேசிய பாடசாலை
காத்தான்குடி மத்திய கல்லூரி
கல்லடி சிவானந்தா தேசிய பாடசாலை
கல்லடி விவேகானந்தா மகளிர் மகா வித்தியாலயம்
ஏறாவூர் அலிகார் தேசிய பாடசாலை
வந்தாறுமூலை விஷ்ணு மகா வித்தியாலயம்
மீராவோடை அல்-ஹிதாயா மகா வித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர்மசேன பத்திராஜவின்

# ஒரு பாதையைத் தேடி

## ஆவணத் திரைப்படம் (2006)

### சகவாழ்வுக்கான நம்பிக்கைகளையும் முரண்பாட்டின் வரலாற்றையும் காவிச் செல்லும் புகையிரதம்

கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திலிருந்து 1905ம் ஆண்டு புறப்படும் யாழ்தேவி புகையிரதம் 100 ஆண்டுகள் காலப்பகுதியினூடாக யாழ்ப்பாணம் நோக்கிப் பயணிக்கிறது. வடக்கையும் தெற்கையும் இணைக்கும் இப்பயணத்தின் வழியே ஒரு அரசியல் வரலாற்று ஆவணமாகத் திரையில் விரிகிறது அமரர் கலாநிதி தர்மசேன பத்திராஜவின் 'ஒரு பாதையைத் தேடி' ஆவணத் திரைப்படம். தமிழ், சிங்கள, முஸ்லிம் சமூகங்கள் இந்நாட்டின் அரசியல் போக்குகளால் எவ்வாறு பிளவடைந்தன என்பதை சமநிலை தளம்பாமல் அறிவுபூர்வமான தளத்தில் இத்திரைப்படம் ஆராய்கிறது. தூரநோக்கற்ற தலைமைகளின் செயற்பாடுகள் நாட்டை நிர்க்கதிக்குள்ளாக்கியிருப்பதை வலுவான ஆதாரங்களுடன் திரைப்படம் முன்வைக்கிறது.



அரச உத்தியோகத்தர்கள், வர்த்தகர்கள் பரஸ்பரம் சமூகங்களிடையே உறவுப் பாலமாக விளங்குபவர்கள். இன மோதல்கள் முதலில் துண்டிப்பது இந்த இணைப்பைத்தான். இன்றும் கூட இதுதான் நிலை. இலங்கையின் உள்நாட்டுப் போர் முனைப்படைந்த போது வடக்குக்கும் தெற்குக்குமான போக்குவரத்து முற்றாகச் சிதைவடைந்தது. இரு புறத்திலும் பணியாற்றியவர்கள் தத்தமது ஊர்களுக்குள் முடங்க நேரிட்டது. கலாச்சார நெருக்கங்கள் அகன்று அந்நியமாதல் அதிகரித்தது. இத் திரைப்படத்தின் மைய இழையாக வரும் புகையிரதப் பயணத்தின் நெடுகிலும் இனமுரண்பாட்டின் முக்கிய நிகழ்வுகள் அனைத்தும் கோர்வையாக வந்து செல்கின்றன.

மிகுதிக் காலத்தைக் கழிக்கவென மேற்கு நாடொன்றிலிருந்து இலங்கை திரும்பிய தந்தை, அவரைக் காண்பதற்காய் வெளிநாட்டிலிருந்து தாயகம் வரும் மகளும் மகனும், புலம்பெயர் நாடொன்றுக்கு மணமகளாகத் தன் பிள்ளையை அனுப்பிவிடப் போராடும் தாய், 90களில் புலிகளால் விரட்டப்பட்டு மீண்டும் தம் வாழிடத்தைத் தேடி வரும் வடக்கு முஸ்லிம் குடும்பம், தன் பேக்கரியை மூடிவிட்டு மீண்டும் தெற்கு நோக்கிப் புறப்படும் சிங்கள வர்த்தக ரென போரின் பன்முகமும் திரையில் வெளிப்படுகிறது.

போரின் வடுக்களை இலங்கைச் சமூகங்கள் அனைத்துக்குமாகப் பொதுமைப்படுத்தும் இத்திரைப்படம் நல்லிணக்கம் பற்றிய பாரிய கேள்வியொன்றை இறுதியில் முன்வைக்கிறது. 'பல்வேறு கடினமான அனுபவங்களைக் கடந்து இன்று ஓரிடத்துக்கு வந்து சேர்ந்திருக்கும் மனிதர்கள் அனைவரதும் அங்கலாய்ப்பு சமாதான சகவாழ்வொன்று தான். ஆனால் அவர்களிடையேயுள்ள இறுகிய மௌனத்தை யார் கலைப்பது?' என்பதே அது.

நிறன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# History and Hope

## Documentary film (2006)

## IN SEARCH OF A ROAD



*by Dharmasena Pathiraja*

The film takes as its main motifs the northern railway line in Sri Lanka and the A9 the two main links running parallel to each other from North to the South. The railway line and the A9 narrate the story of war and peace, of travel, mobility, place and displacement in this road movie turned documentary on the history of the Sri Lankan state and the ethnic conflict.



The story unfolds even as its people embark on a long journey on August 1, 1905 through place, land, territory, war and peace, home and state into the land of the unknown, to a no-man's land.


Blurring the lines between fiction and reality, the film takes us on a 100-year journey through history and memory in to the future.

The stories in the film: A young girl and her brother living abroad motor to Jaffha to visit their father who returned from exile in a western country to settle back in his home. A mother with a betrothed daughter attempts traveling south from Jaffna for the marriage but is not allowed to proceed. A Sinhalese baker, welcome in Jaffna by even the Jaffna man, evacuates his family down south at the first rumblings of unrest and then he too has to leave. The utterly disturbing exodus of thou sands of Muslims from Jaffna given 24 hours notice to quit by the LTTE, is detailed with stark reality.

Film 'In Search of a Road' is both a documentary of history and hope. It shows a road that has been jammed with conflict and misunder standing. But it is also a road that carries the memory of peace and community. In Search of a Road is a prime example of cinema's ability to make connections and to bring people together'.




நிராயுதம்
வார இதழை எதிர்வரும் மார்ச் மாதம் வரை இலவசமாகப் பெற விரும்புவோர்
070 1775 105
எனும் இலக்கத்துக்கு உங்கள் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களை
sms அல்லது whatsapp
மூலம் அனுப்பி பதிவு செய்யுங்கள்!
நிராயுதம் பற்றிய உங்கள் கருத்துக்களை எழுதுங்கள்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால்பந்தினூடாக நல்லுறவை வளர்த்த

# ஜனாப் என்.ரி.பாறுக்



து. கௌரீஸ்வரன்

இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் உபதலைவர்களுள் ஒருவரான ஜனாப் என்.ரி. பாறுக் அவர்கள் மாரடைப்பினால் மரணித்து விட்டார். இவருடைய திடீர் இழப்பு கிழக்கிலங்கையின் கால்பந்தாட்டத் துறைக்கு பேரிழப்பாகவே கொள்ளப்பட வேண்டியது.

இவர் கால்பந்தாட்டத்தின் சட்ட திட்டங்கள், நிருவாக நடைமுறைகள் எனப் பல விடயங்களில் மிகப் பிந்திய அறிதல் தெளிதல்களுடன் பாண்டித்தியம் மிக்கவராக இயங்கியவர். மக்கள் வங்கியில் சிரேஷ்ட உத்தியோகத்தராகத் தொழிலாற்றிய இவர், தனது கடமை நேரம் தவிர்ந்த பிற நேரங்களைப் பெருமளவு கால்பந்தாட்டத் துறையிலேயே கழித்திருந்தார்.



அம்பாறை மாவட்டத்தின் அக்கரைப்பற்றினைத் தனது பிறப்பிடமாகக் கொண்ட இவர், பாடசாலை நாட்களிலேயே கால்பந்தாட்ட வீரனாகப் பிரகாசித்து சர்வதேசப் போட்டிகள் வரை சென்று வந்துள்ளார். பாடசாலைக் காலத்தின் பின்னர் கிழக்கில் பிரசித்தி பெற்றுத் திகழ்ந்த மட்டுநகர் பாடுமீன் பொழுதுபோக்குக் கழகத்தில் இணைந்து தனது இளமைக் காலங்களில் விளையாடியவர். இதன் காரணமாக தேசியப் போட்டிகள் பலவற்றில் பங்குபற்றித் தனது திறமையினை மேலும் வளர்த்துக் கொண்டார். 1990களின் பின்னர் காத்தான்குடி சன்றைஸ் விளையாட்டுக் கழகத்தின் சார்பில் போட்டிகளில் பங்குபற்றியிருந்தார்.

1990களின் பின்னர் கால்பந்தாட்ட நடுவராகச் சேவையாற்றுவதிலேயே அதிக ஆர்வஞ் செலுத்தியிருந்தார். மட்டக்களப்பு மாவட்ட கால்பந்தாட்ட நடுவர்கள் சங்கத்தில் பல பதவிகளையேற்று இச்சங்கத்தினூடாக இளம் நடுவர்கள் பலர் உருவாகத் தனது பங்களிப்புக்களை வழங்கியுள்ளார். 1990களின் பின்னரான வருடங்களில் காத்தான்குடியிலிருந்து மிதி வண்டியில் வெபர் மைதானத்திற்கு வந்து கால்பந்து போட்டிகளை உரிய நேரத்திற்குத் தொடங்குவதில் கவனமாகச் செயலாற்றியிருந்தார். அக்காலங்களில் கால்பந்து வீரர்களும், கழகங்களும், இரசிகர்களும் விரும்பிய நடுவர்களுள் ஒருவராக இவர் திகழ்ந்தார்.

என்.ரி. பாறுக் அவர்களின் உடல் தோற்றமும் அவர் ஆடை அணியும் விதமும் பிறரைக் கவருவதாகவே அமைந்திருக்கும் ஒரு கால்பந்தாட்ட வீரனுக்கேயுரிய மிடுக்கான தோற்றத்துடனேயே அவர் எப்போதும் காட்சியளிப்பார். மரணிக்கும் வரை அவர் ஓர் அறுபது வயது இளைஞனாகவே திகழ்ந்தார்.

ஏழு தசாப்தங்களைக் கடந்துள்ள மட்டக்களப்பு மாவட்ட கால்பந்தாட்டச் சங்கத்தின் வரலாற்றில் 1990-2015 ஆம் ஆண்டு வரையான மூன்று தசாப்த காலமாக பல பதவிகளை வகித்தவர். நிருவாகச் செயலாளர், தலைவர் ஆகிய பதவிகளுக்குத் தெரிவுசெய்யப்பட்டு மட்டுநகரின் கால்பந்து கழகங்களால் மாண்பு செய்யப்பட்டவர்.

2015 இன் பின்னர் இலங்கையில் புதிய கால்பந்தாட்டச் சங்கங்கள் உருவாகுவதற்கான வாய்ப்புக்கள் கிடைத்ததால் காத்தான்குடி கால்பந்தாட்ட லீக் உருவானபோது அதன் தலைவராகத் தெரிவாகியவர். கழகங்களின் அதிகரிப்பால் புதிய சங்கங்கள் உருவாகுவதைத் தவிர்க்க முடியாதிருந்த போதிலும் புதிய சங்கங்களின் உருவாக்கத்தினால் தமிழ்-முஸ்லிம் கழகங்களுக்கிடையிலான உறவுகளும் தொடர்புகளும் அறுந்து விடக் கூடாது என்பதில் அக்கறை செலுத்தியவர். இதன் காரணமாக காத்தான்குடி லீக்கினால் நடத்தப்படும் அழைப்புச் சுற்றுப் போட்டிகளில் வருடாந்தம் மட்டக்களப்பு கால்பந்தாட்டச் சங்கத்தின் கழகங்கள் பங்கு பற்றித் தமது உறவினைத் தொடரச் செய்வதில் அதிக கவனஞ் செலுத்தியவர்.

(தொடர் பக்.16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Jerusalem, Damascus, மன்னார்



என். ஆத்மா

கெமரா, ஒளித்தெறிப்பிக்கள்
ஒலிப்பதிவுக் கருவிகள்
நான், உதவி இயக்குனர்கள்
(ஒருவர் மன்னார்-க்றிஸ்ற்றியன்)
தொழினுட்பக் கலைஞர்கள்..
......................................
முடிவற்று அகண்ட பெரும் மணற் பூமி
தூண்களாய் உயரும் ஒரேயின மரங்கள்
இழுபட்டு இழுபட்டு படக்குழு ஊர்கிறது

உட்செல்லச் செல்ல
மரங்கள் விலகி பின்னகர்ந்து வழிவிட்டு
வட்டமாய்ச் சூழ்ந்து தொடர்கின்றன எம்மை.
நிலம் விரிந்து செல்ல
நாங்களும் மரங்களும் இயங்கும்
பன்முனைப் பெயர்ச்சி
விசித்திரங்கள் வரவேற்க

வலமிருந்து இடமான நகர்வுக் காட்சியில்
(panning from right to left)
மரங்களிடையே தோன்றுகிறது
ஆதி தேவாலயம் சிறிது சிறிதாய்
பச்சை நிறத்தால் கரையிடப்பட்ட
வெள்ளைச் சுவர்கள்
பள்ளிவாயல்களை நினைவூட்ட
கலீபா உமரை சேர்ச்சுக்குள் தொழ அழைத்த
பாதிரியார் சலனமாய் தெரிந்து மறைகிறார்

அண்மைக் காட்சியில் சேர்ச் தான்
பள்ளிவாயல் சாயலில் நிற்கிறது
ஹபாயா போன்ற மேலங்கியும்
ஸ்காஃபும் அணிந்த பெண்கள்
சிலுவையோடு வெளிச்செல்கிறார்கள்
மனம் சிலிர்த்து அகல எண்ணும் கணம்
மதிலின் மேலாய் காண்கிறேன்
சேர்ச்சின் மற்றொரு புறம்
தொழுகைக்காய் தரையில்
சிரம் தாழ்த்தும் முஸ்லிம்களை

பேச்சற்று தூரம் போய்
தேவாலய சுற்றுப்புறம் மொத்தமும் அடங்க
அகலக்காட்சியில்
கெமராவை ஃப்ரேம் வைக்கச் சொல்கிறேன்
........................
வியூ ஃபைன்டரூடாக
சேர்ச்சின் விலாவில் பள்ளிவாயல்
ஒரே வளவுக்குள் அதே மதிலுக்குள்
கண்களை எடுக்கிறேன்
காட்சியின் முன்தளத்தில்
சவுக்கு மர இலைகளைப் பிடித்து
ஃப்ரேமை மெருகேற்றுகிறார் மன்னார்த் தம்பி
'சைலென்ஸ்' 'ஸ்டேன்ட் பை'
'ரோலிங்' 'அக்ஷன்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2வது சிறகுநுனி சர்வதேச திரைப்பட விழா 2019, மட்டக்களப்பு

## ‘மழைக்குள் திரியாமல் திரைக்குள் வாருங்கள்’





கடந்த டிசம்பர் 13, 14, 15ம் திகதிகளில் மட்டக்களப்பு கல்லடி சாந்தி திரையரங்கில் 2 ஆவது சிறகுநுனி சர்வதேச திரைப்பட விழா நடை பெற்றது. Sirahununi Centre for Arts and Media ஏற்பாடு செய்திருந்த இந்நிகழ்வில் ஜெர்மனி, பிரான்ஸ், பிரேஸில், ஈரான், இந்தியா, பாகிஸ்தான், பங்களா தேஷ், இலங்கை ஆகிய நாடுகளைச் சேர்ந்த புதிய 7 முழு நீளத் திரைப்படங்களும் சிறகுநுனி தயாரித்த 6 குறுந் திரைப் படங்களும் முற்றிலும் இலவசமாகக் காண்பிக்கப்பட்டன.

ஆரம்ப நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திரு. மா. உதயகுமார், கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஜனாப். M.K.M. மன்சூர், பாகிஸ்தான் உயர் ஸ்தானிகராலயப் பிரதிநிதி கௌரவ இன்திசார் அஹ்மட் சுலெஹ்ரி ஆகியோர் அதிதிகளாகக் கலந்து சிறப்பித்தனர்.

கிழக்கு மாகாண இளம் இயக்குனர்களால் உருவாக்கப் பட்டு சர்வதேச விருதுகளைப் பெற்ற இலங்கைக் குறுந் திரைப்படங்களின் திரையிடல்களும் பார்வையாளர்களுட னான கருத்துப் பகிர்வுகளும் இத்திரைப்பட விழாவின் குறிப்பிடத்தக்க அம்சங்களாகும்.

கடந்த ஆண்டு கிழக்கின் முதலாவது சர்வதேச திரைப் பட விழாவாக சிறகுநுனியால் ஆரம்பிக்கப்பட்ட இந்நிகழ் வுக்கு இம்முறையும் தூர இடங்களிலிருந்தெல்லாம் தமிழ், முஸ்லிம் சமூகங்களைச் சேர்ந்த பெருமளவான திரைப்பட ரசிகர்கள் வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

-மாயவன்



## கால்பந்தினூடாக.... (தொடர்)

கிழக்கில் தமிழ்-முஸ்லிம் சமூகங்களின் நல்லுறவில் கால்பந்தாட்டம் மிக முக்கியமான பங்களிப்பை வழங்கி வந்துள்ளதாகவும் அதன் ஒரு விளைவாகத் தான் உள்ள தாகவும் தன்னை வளர்த்துவிட்டது மட்டக்களப்பு கால் பந்தாட்டச் சங்கமே என அடிக்கடி கூறுவார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் கால்பந்தாட்ட வீரர் களால் பாறுக் நானா, பாறுக் அண்ணா எனப் பாசத் தோடு அழைக்கப்படும் இவர் இன, மத வேறுபாடு களைக் கடந்து மட்டுநகர் கால்பந்தாட்ட வீரர்களின் இல்லங்களில் நிகழும் வைபவங்களில் வந்து பங்கு பற்றும் வேற்றுமைகளுள் ஒற்றுமை காணும் ஓர் ஆக்க பூர்வமான மனிதனாக வாழ்ந்தவர்.

சிறந்ததொரு அறிவிப்பாளர்; ஆங்கிலத்திலும் தமிழி லும் சரளமாக உரையாற்றும் மொழிவளங் கொண்ட வர். மட்டக்களப்பில் நடைபெற்ற பல விழாக்களிலும் வைபவங்களிலும் அறிவிப்பாளராகப் பங்குபற்றியவர்.

இத்தகைய சிறந்த ஆளுமையின் திடீர் மரணம் முஸ் லிம், தமிழ் சமூகங்களுக்கு ஒரு பேரிழப்பாகவே உள்ளது. குறிப்பாக தமிழ் முஸ்லிம் சமூகங்களிடையே நல்லுற வுடன் வாழ்ந்த ஓர் உதாரணரின் இழப்பாகவே அமைந் துள்ளது. அன்னாரின் வாழ்க்கை நமக்குக் கற்றுத் தரும் படிப்பினைகளுடன் அவரின் ஆன்ம ஈடேற்றத்திற்காக நமது அஞ்சலிகளைச் செலுத்துவோம்.

## நிராயுதம்

சமூகங்களிடையான விரோத மனநிலையில் குளிர்காயும் ஊடக அரசியல் நீண்ட காலமாய் மனிதர்களின் இரத்தம் குடித்து வயிறும் தலையும் கனத்துப் போயுள்ளது. கட்சி சார் அரசியலும் இதே திசையிலேயே தொடர்ந்தும் பிரக்ஞையற்றுக் காலம் கடத்தி வருகிறது.

மனிதர்களை ஒன்றிணைக்கும் புள்ளிகளை அடை யாளம் காணுதலும் அங்கீகரித்தலும் அவற்றை முன் கொண்டு செல்லுதலுமே இன்று நம் முன்னுள்ள பிரதான கடமைகளாகும். நல்லிணக்க அறிக்கையிடல் மூலம் அதன் சிறு பகுதியைச் சாத்தியப்படுத்தலாம் என்பது எமது நம்பிக்கை.

Published by:

sirahununi

070 177 5 105
niraayutham journal
niraayutham@gmail.com
sirahununi@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org